# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## நீதித்துறை (திருத்தம்)

1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தைத்
திருத்துவதற்கானதொரு சட்டமூலம்

---

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் அவர்களால்
2025 திசெம்பர் மாதம் 18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது

(2025 நவெம்பர் மாதம் 20 ஆம் திகதியன்று வர்த்தமானியில்
வெளியிடப்பட்டது)

பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது

---

[44 ஆம் சட்டமூலம்]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 14.40 தபாற் செலவு : ரூபா 150.00

இச்சட்டமூலத்தை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யமுடியும்

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2:*** இவ்வாசகம், 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் (218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச்சட்டத்தின் கீழ், 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, போதையூட்டும் அவுடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களினதும் சட்ட முரணான வியாபாரத்திற்கெதிரான சமவாயங்கள் சட்டத்தின் கீழ் அல்லது அத்தகைய ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் ஆழ்கடலில் எவரேனும் ஆளினால் புரியப்பட்ட தவறொன்று தொடர்பிலான எல்லா குற்றவழக்குகளும் குற்றபகர்வுகளும் இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றத்தினால் விசாரிக்கப்பட்டு விளங்கித் தீர்மானிக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்கின்றது.

ச.வ.-ஓ 38/2024

# 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2025 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, நீதித்துறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்

**2.** 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:- 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, சட்டத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்

"(ஈ) ஆழ்கடலின் மீது எவரேனும் ஆளினால் புரியப்பட்ட ஏதேனும் தவறு –

(i) நாட்டிடை சட்டத்தினால் கடற்கொள்ளையாக அத்தகைய தவறு இருக்குமிடத்து; அல்லது

(ii) அத்தகைய தவறு, (218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ், 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, போதையூட்டும் அவுடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களினதும் சட்டமுரணான வியாபாரத்திற்கெதிரான சமவாயங்கள் சட்டத்தின்கீழ் அல்லது அத்தகைய ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் தவறொன்றாக இருக்குமிடத்து;".

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

PL 15592 - 172 (2025/12)